RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025






# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING மாலை நாளிதழ்






சிவகங்கை | மலர்-4 | இதழ்- 251 | செப்டம்பர்.12 2025 வெள்ளிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

## திமுக முப்பெரும் விழா தேர்தல் திருப்புமுனையாக இருக்கும்: அமைச்சர் கே.என்.நேரு

கரூர்: செப்.12-

கரூரில் நடைபெறும் திமுக முப்பெரும் விழா 2026ம் ஆண்டு தேர்தல் திருப்புமுனையாக இருக்கும் என நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு தெரிவித்தார்.

கரூர் திருச்சி தேசிய நெடுஞ் சாலையில் கோடங்கிப்பட்டி பிரிவு அருகே செப்.17ம் தேதி திமுக முப்பெரும் விழா நடைபெறுகிறது. இதனையொட்டி விழா நடைபெறும் இடத்தையும், மாநாட்டு ஏற்பாடுகளையும் திமுக தலைமை கழக முதன்மை செயலாளரும், நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சருமான கே.என்.நேரு இன்று (செப்.11ம் தேதி) பார்வையிட்டு முப்பெரும் விழா தகவல்கள் அடங்கிய பலூனை பறக்கவிட்டார்.



அப்போது செய்தியாளர்களிடம் கே.என்.நேரு கூறியது: திமுக முப்பெரும் விழா ஏற்பாடுகளை மாவட்ட செயலாளர் செந்தில்பாலாஜி சிறப்பாக ஏற்பாடு செய்து வருகிறார். அவர் சாதாரண கூட்டங்களையே 1 லட்சம் பேர் பங்கேற்கும் வகையில் சிறப்பாக நடத்துவார்.

திமுக முப்பெரும் விழாவை இன்னும் சிறப்பாக நடத்த வேண்டும் என அவர் நினைத்துள்ளார். எனவே கிட்டத்தட்ட 3 லட்சம் பேர் பங்கேற்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. அதற்குரிய ஏற்பாடுகளை செந்தில்பாலாஜி செய்து வருகிறார். கோவை, நாமக்கல், ஈரோடு போன்ற இடங்களில் பல்வேறு கூட்டங்களை ஏற்பாடு செய்து நடத்தியுள்ளார்.

கரூர் திருச்சி மாவட்டத்தில் இருந்த காரணத்தால் அதிகமான அளவுக்கு திருச்சி மாவட்டத்தில் இருந்து பங்கேற்பார்கள். எத்தனை பேர் வரவேண்டும் எனக் கூறுகிறாரோ அத்தனை பேர் வருவார்கள். 2026ம் ஆண்டு தேர்தலுக்கு திருப்புமுனையாக இம்மாநாடு இருக்கும். நடக்க விருக்கின்ற தேர்தலுக்கு அஸ்திவாரத்தை செந்தில் பாலாஜி செய்து இருக்கிறார். நிச்சயமாக மிகப்பெரிய வெற்றி பெறும்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் திருச்சிக்கு வந்து அங்கிருந்து கரூர் வருகிறார். பெரியார் பிறந்த நாள் உறுதிமொழியை திருச்சியில் ஏற்கிறார். மாநில மாநாடுகள் காலை முதல் மாலை வரை நடைபெறும். இது மாலை 5 மணி முதல் 7 மணி வரை குறுகிய காலத்தில் அதனை விட கூடுதல் சிறப்பாக நடைபெறும். செந்தில்பாலாஜியை நம்பி முதல்வர் மு.க.ஸ்டாலின் இந்த பொறுப்பை ஒப்படைத்துள்ளார். எனவே சிறப்பாக இருக்கும் என்றார்.

முன்னாள் அமைச்சர் வி.செந்தில்பாலாஜி, எம்எல்ஏக்கள் ரா.இளங்கோ (அரவக்குறிச்சி), க.சிவகாமசுந்தரி (கிருஷ்ணராயபுரம்), கரூர் மாநகராட்சி மேயர் கவிதா, துணை மேயர் ப.சரவணன், மாநில நெசவாளர் அணி தலைவர் நன்னியூர் ராஜேந்திரன், திருச்சி மாநகராட்சி மேயர் அன்பழகன், ஐஜி ஜோஷி நிர்மல்குமார், கரூர் எஸ்.பி. கே.ஜோஷ்தங்கையா உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

## பாமகவில் இருந்து அன்புமணி நீக்கம்: ராமதாஸ் அதிரடி நடவடிக்கை

விழுப்புரம், செப்.12-

பாமக செயல் தலைவர் மற்றும் கட்சியின் அடிப்படை உறுப்பினர் பொறுப்புகளில் இருந்து அன்புமணி நீக்கப்படுவதாக அக்கட்சி நிறுவனர் ராமதாஸ் இன்று அறிவித்தார். விழுப்புரம் மாவட்டம் தைலாபுரம் தோட்டத்தில் செய்தியாளர்களை சந்தித்த ராமதாஸ் இந்த அறிவிப்பை வெளியிட்டார்.



மேலும், இனி அன்புமணி தனது இனிஷியலை மட்டுமே பயன்படுத்திக் கொள்ளலாம், பெயருக்குப் பின்னால் ராமதாஸ் என்றுகூட எழுதக்கூடாது என்று ஆவேசமாகக் கூறினார்.

கடந்த சில மாதங்க ளாகவே, ராமதாஸுக்கும் அன்புமணி ராமதாஸுக்கும் இடையே மோதல் போக்கு நிலவி வருகிறது. அதுவும் ராமதாஸ் முகுந்தனை பாமக இளைஞரணித் தலைவராக நியமித்தது அன்புமணியை பெருமளவில் எரிச்சலூட்டியது. மேடையிலேயே இது தொடர்பாக தந்தையும் மகனும் கடும் வாக்குவாதம் செய்ய, அவர்களுக்கு இடையேயான உரசல் அம்பலமானது. அதன் பின்னர் நடந்ததெல்லாம் அனைவரும் அறிந்த மோதல்கள்.

இது உச்சகட்ட வாக்குவாதங்களை சந்தித்த நிலையில், இருவருக்கும் இடையே சமரசம் செய்ய பல்வேறு முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. ஆனால், எதுவும் பலனளிக்காத நிலையில், அன்புமணிக்கு ராமதாஸ் ஒரு கெடு வைத்தார். அந்தக் கெடுவுக்கு அன்புமணி வளைந்து கொடுக்காத நிலையில் இன்று இந்த நீக்க நடவடிக்கை நடந்துள்ளது.

10ம் தேதி கெடு முடிந்தது: கடந்த செப்டம்பர் 4ம் தேதி தைலாபுரத்தில் பாமக மாநில நிர்வாக குழு கூட்டம் ராமதாஸ் தலைமையில் நடந்தது. அந்த கூட்டம் முடிந்ததும் செய்தியாளர்களை சந்தித்த ராமதாஸ், “அன்புமணி மீதான குற்றச்சாட்டுகள் குறித்து அனுப்பிவைக்கப்பட்ட நோட்டீஸுக்கு அவர் செப் 10ம் தேதிக்குள் உரிய விளக்கம் அளிக்க வேண்டுமென மீண்டும் நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது. இது 2வது கெடு. இதற்கும் அன்புமணி பதிலளிக்கவில்லை என்றால், அன்புமணி மீது கட்சி விரோத நடவடிக்கை எடுக்கப்படும்.” என்று தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் அந்தக் கெடு நேற்றே முடிந்த நிலையில், இன்று ராமதாஸ் முக்கிய அறிவிப்பை வெளியிடுவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. அதற்கேற்ப, ராமதாஸ் இன்று செய்தியாளர்களை சந்தித்தார்.

இனிஷியலை மட்டுமே பயன்படுத்தலாம்... அப்போது ராமதாஸ், “பல்வேறு குற்றச்சாட்டுகளுக்காக அன்புமணியை பாட்டாளி மக்கள் கட்சியின் அடிப்படை உறுப்பினர் மற்றும் செயல் தலைவர் பொறுப்பில் இருந்து நீக்குகிறேன்.


பட்டாளி மக்கள் கட்சி பொதுக்குழு எழுப்பிய 16 குற்றச்சாட்டுகளுக்கு அன்புமணி எந்த பதிலும் அளிக்கவில்லை.. இரண்டு முறை அவகாசம் தந்தும், நேரிலோ அல்லது எழுத்து பூர்வமாகவோ அல்லது கடிதம் மூலமாகவே எந்த பதிலும்அளிக்கவில்லை. எனவே அவர் 16 குற்றச்சாட்டுகளையும் ஏற்பதாக அனுமானிக் கப்படுகிறது. எனவே அன்புமணி பாமகவின் அடிப்படைஉறுப்பினர் பொறுப்பில் இருந்து நீக்குகிறேன்.

அன்புமணியுடன் சேர்ந்து செயல்பட்டவர்கள் திருந்த வாய்ப்பு தருகிறேன். அவர்கள் மீண்டும் வந்தால் பாமகவில் சேர்க்க தயாராக உள்ளேன். மூத்தவர்கள் பலர் அறிவுரை கூறியும் அன்புமணி கேட்கவில்லை. அரசியல்வாதி என்பதற்கு தகுதியற்றவர் அன்புமணி. இனி அவர், இரா என்ற இனிஷியலை மட்டும் பயன்படுத்தலாம். தனது பெயருக்கு பின்னால் ராமதாஸ் என்று அன்புமணி பயன்படுத்தக்கூடாது.” என்று கூறினார்.

## கிலோ ரூ.2 தக்காளி விலை வீழ்ச்சியால் தென்காசி விவசாயிகள் வேதனை

தென்காசி, செப்.12-

தென்காசி மாவட்டத்தில் தக்காளிப் பழம் கிலோ ரூ.2 முதல் 6 ரூபாய் வரை விவசாயிகளிடம் இருந்து கொள்முதல் செய்யப்படுகிறது. விலை வீழ்ச்சியால் விவசாயிகள் வேதனை அடைந்துள்ளனர்.



தென்காசி மாவட்டம் விவசாயத்தை முக்கிய தொழிலாக கொண்டது. ஆலங்குளம், கீழப்பாவூர், சுரண்டை, சாம்பவர்வடகரை, ஆய்க்குடி, அகரக்கட்டு உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் ஏராளமான விவசாயிகள் தக்காளி சாகுபடி செய்துள்ளனர். கடந்த ஒரு மாதத்துக்கு முன்பு ஒரு கிலோ தக்காளி ரூ.40 வரை விற்பனையானது. இதனால் தக்காளி சாகுபடி செய்த விவசாயிகள் நம்பிக்கையோடு இருந்தனர்.

இந்நிலையில், சந்தைகளுக்கு தக்காளி வரத்து அதிகரிக்கத் தொடங்கியது. இதனால் தக்காளிப் பழம் விலை படிப்படியாக படிப்படியாக குறையத் தொடங்கியது. பாவூர்சத்திரம், ஆலங்குளம், சுரண்டை சந்தையில் ஒரு கிலோ தக்காளிப்பழம் ரூ.2 முதல் 6 ரூபாய் வரை விற்பனையாகிறது. விலை வீழ்ச்சியால் விவசாயிகள் வேதனை அடைந்தனர். சில இடங்களில் தக்காளிப் பழங்களை பறித்து, வயலிலேயே கொட்டியுள்ளனர். சில விவசாயிகள் தக்காளி பயிருக்கு தண்ணீர் பாய்ச்சுதல், உரமிடுதல், மருந்து தெளித்தல், களை எடுத்தல் போன்ற எந்த பராமிப்பு பணிகளையும் மேற்கொள்ளாமல் அப்படியே பராமரிப்பின்றி விட்டுள்ளனர்.

இதுகுறித்து விவசாயிகள் கூறும்போது, “தக்காளிப் பழம் விலை வீழ்ச்சியால் கடும் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. தக்காளிப் பழங்களை பறித்து சுமந்து சென்று வாகனத்தில் ஏற்றி, சந்தைக்கு கொண்டு சென்று விற்பனை செய்ய வேண்டும். இதற்கான ஆள் கூலி, வாகன வாடகை, சந்தையில் கமிஷன் போக வருமானம் எதுவும் இருக்காது. இந்த விலைக்கு தக்காளியை விற்பனை செய்வதற்காக பயிர்களை பராமரிக்க மருந்து தெளித்தல், உரமிடுதல், களை எடுத்தல் போன்ற பணிகளை செய்ய செலவு செய்தால் நஷ்டம் அதிகமாகும். இதனால் கடந்த சில நாட்களாக பயிர்களை பராமரிக்காமல் விட்டுவிட்டோம். தக்காளிப் பழங்கள் செடியிலேயே பழுத்து வீணாகின்றன.

கிலோ ரூ.40 வரை விற்பனையானபோது சில விவசாயிகளுக்கு லாபம் கிடைத்தது. ஆனால் அடுத்தடுத்த நாட்களில் விலை வேகமாக வீழ்ச்சியடையத் தொடங்கியது. தற்போது 2 ரூபாய் முதல் 6 ரூபாய் வரை விற்பனையாகிறது. பெரிய வெங்காயம், சின்ன வெங்காயம் சாகுபடி செய்த விவசாயிகள் விலை வீழ்ச்சியால் பாதிக்கப்பட்டனர். இந்நிலையில், தக்காளி சாகுபடி செய்த விவசாயிகளும் விலை வீழ்ச்சியால் தற்போது பாதிக்கப்பட்டுள்ளனர்” என்றனர்.

இது குறித்து வியாபாரிகள் கூறும்போது, “தமிழகத்தில் பரவலாக தக்காளி வரத்து அதிகமாக உள்ளது. தென்காசி மாவட்டத்தில் தேவைக்கு அதிகமாக தக்காளி வரத்து உள்ளது. இதனால் விலை வீழ்ச்சியடைந்துள்ளது” என்றனர்.



■ ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடியில் தியாகி இமானுவேல் சேகரனின் 68 வது நினைவு தினத்தை முன்னிட்டு அவரது நினைவிடத்தில் திமுக சார்பில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் மற்றும் அமைச்சர் பெருமக்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் கட்சியின் முக்கிய நிர்வாகிகள் தொண்டர்கள் மலர் வளையம் வைத்து மரியாதை செய்தனர்



■ ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடியில் தியாகி இமானுவேல் சேகரனின் 68 வது நினைவு தினத்தை முன்னிட்டு அவரது நினைவிடத்தில் நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் மற்றும் சாட்டை துரைமுருகன் கட்சியின் முக்கிய நிர்வாகிகள் தொண்டர்கள் கலந்து கொண்டு மலர்வளையம் வைத்து மரியாதை செய்தனர்.



■ ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடியில் தியாகி இமானுவேல் சேகரனின் 68 வது நினைவு தினத்தை முன்னிட்டு அவரது நினைவிடத்தில் தேமுதிக சார்பில் சுதேசி ராமநாதபுரம் மாவட்ட கழகச் செயலாளர் சின்ன சின்ன மற்றும் கட்சியினர் மலர்வளையம் வைத்து மரியாதை செய்தனர்



■ ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடியில் தியாகி இமானுவேல் சேகரனின் 68 வது நினைவு தினத்தை முன்னிட்டு அவரது நினைவிடத்தில் தமிழக வெற்றி கழகம் சார்பில் மாநில பொதுச் செயலாளர் புஷி ஆனந்த் ஆதவ் அர்ஜுனா மற்றும் கட்சியினர் மலர்வளையம் வைத்து மரியாதை செய்தனர்

## ‘உங்களுடன் ஸ்டாலின்’ முகாமுக்காக பள்ளிக்கு விடுமுறை அளித்தது தவறுதான்: அமைச்சர் அன்பில் மகேஸ்

திருச்சி, செப்.12-

பள்ளிக்கு விடுமுறை அளித்துவிட்டு அங்கு உங்களுடன் ஸ்டாலின் முகாம் நடத்தியது தவறு தான் என்றும், இனி இதுபோன்ற தவறு நிகழ அனுமதிக்க மாட்டேன் என்றும் தமிழக பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தெரிவித்தார்.

திருச்சியில் நேற்று அவர் செய்தியாளர்களிடம் கூறியது: முன்னாள் முதல்வர் பழனிசாமி, தமிழக முதல்வரை ஒருமையில் பேசியது வருத்தத்துக்குரியது. யாராக இருந்தாலும் அரசியலில் நாகரிகம் தேவை. சட்டப்பேரவைத் தேர்தல் பிரச்சாரத்தை இன்னும் துணை முதல்வர் உதயநிதி தொடங்கவே இல்லை.

அதற்குள் அவர் எது கூறினாலும், எதிர்க்கட்சியினர் விவாதப்பொருளாக்கி பதில் கொடுக்கின்றனர். அந்தவகையில், துணை முதல்வர் உதயநிதி எதிர்க்கட்சியினரிடம் அச்ச உணர்வை ஏற்படுத்தியிருக்கிறார். உப்பிலியபுரம் அருகே அரசுப் பள்ளிக்கு விடுமுறை அளித்துவிட்டு உங்களுடன் ஸ்டாலின் திட்டம் முகாம் நேற்று முன்தினம் நடைபெற்றதாக எனக்கு தகவல் வந்தது.

இது குறித்து விசாரித்தபோது, மாவட்டக் கல்வி அலுவலர் தன்னிச்சையாக விழா நடத்த இடம் கொடுத்தது தெரியவந்தது. பள்ளியில் ஏற்கெனவே பாடம் நடத்த போதிய நாட்கள் இல்லாத நிலையில், பள்ளிக்கு விடுமுறை அளித்து நிகழ்ச்சி நடத்தியது மிக மிக தவறு. இனி இதுபோன்ற தவறு நிகழ அனுமதிக்க மாட்டேன் என்றார்.



# பெரியார் அண்ணா கலைஞர் போன்ற தலைவர்களின் உயிர் துடிப்பை நமது முதலமைச்சர் கட்டி காப்பதால் உயர்கல்வியை அனைவரும் எளிதாக அடைய முடிகிறது

## உயர் கல்வித் துறை அமைச்சர் கோவி செழியன்

பழனி, செப்.12-

பழனியில் இந்து சமய அறநிலை துறை கட்டுப்பாட்டில் இயங்கி வரும் பழனியாண்டவர் கலை மற்றும் பண்பாட்டு அறிவியல் கல்லூரியில் மாபெரும் தமிழ் கனவு நிகழ்ச்சி நடைபெற்றது. தமிழர் பண்பாடு நாகரிகம் கலாச்சாரம் உள்ளிட்டவைகளை அனைவரும் அறிந்து கொள்ளும் வகையில் நடத்தப்படும் மாபெரும் தமிழ் கனவு நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி செழியன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். மருத்துவம் விளையாட்டுத்துறை பெண் கல்வி உயர்கல்வி உள்ளிட்ட அனைத்து துறைகளிலும் முதலிடத்தில் தமிழ்நாடு சிறந்து விளங்கி வருவதாகவும் தடுக்கப்பட்ட கல்வி செல்வத்தை பட்டதாரி என்று அடையாளத்தை இன்று நாம் அனைவரும் பெற்றிருக்கிறோம் என்று சொன்னால் அதற்கு திராவிட இயக்கங்களை காரணம் என தெரிவித்த அவர் இந்நாட்டிற்கும் மக்களுக்கும் அண்ணா பெரியார் கலைஞர் ஆற்றிய உயிர்த்துடிப்பை கட்டிக் காக்கும் முதலமைச்சராக நமது முதலமைச்சர் உள்ள காரணத்தால் நாம் அனைவரும் உயர் கல்வியை எளிதாக அடைய முடிவதாக அமைச்சர் தெரிவித்தார். தமிழ் கனவு குறித்து சிறப்பாக கேள்வி மற்றும் பதில் அளித்த மாணவ மாணவிகளுக்கு சான்றிதழ்களும் பரிசுகளும் வழங்கப்பட்டது. நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் சரவணன் பழனி கோயில் அறங்காவலர் குழு தலைவர் சுப்பிரமணியன் உள்ளிட்டோர் மற்றும். மாவட்டம் முழுவதிலிருந்தும் எட்டு கல்லூரியை சேர்ந்த மாணவ மாணவிகள் பேராசிரியர்கள் கலந்து கொண்டனர்.





# பன்னாட்டு தொழிற்சங்க கூட்டமைப்பு மாநாட்டில் தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றிய மாநிலத்தலைவர் அமிர்தகுமார் பேச்சு

காத்மாண்டு, செப்.12-

உலகளாவிய தொழிற்சங்கமான பன்னாட்டு தொழிற்சங்க கூட்டமைப்பின் தெற்காசிய மாநாடு நேபாளத்தின் தலைநகர் காத்மாண்டுவில் நடைபெற்றது.

இம்மாநாட்டில் தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியத்தின் மாநிலத் தலைவர் த.அமிர்தகுமார் கலந்து கொண்டு பேசினார்.




இம்மாநாட்டில் ஜப்பானில் பணிபுரியும் பொதுப்பணியாளர்கள் அனைவருக்கும் தொழிலாளருக்கான அடிப்படை உரிமை வழங்க வேண்டி தீர்மானத்தை முன்மொழிந்து பேசினார்.

தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியத்தின் மாநிலத்தலைவர் த.அமிர்தகுமார் முன்மொழிந்த இத்தீர்மானத்தை அனைவரும் வழிமொழிந்ததால் இத்தீர்மானம் ஒருமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

இம்மாநாட்டில் இந்தியா,இலங்கை,பாகிஸ்தான்,வங்காளதேசம்,நேபாளம்,மலேசியா,சிங்கப்பூர்,மியான்மர்,தாய்லாந்து, இந்தோனேசியா போன்ற பல்வேறு நாடுகளிலிருந்தும் தொழிற்சங்க பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

5 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் இம்மாநாட்டில் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

நேபாளத்தில் தற்போது கலவரங்கள் கட்டுக்கடங்காமல் உள்ள நிலமையையும் பரிசீலித்த இம்மாநாடு இது தொடர்பாகவும் சிறப்பு தீர்மானம் முன்மொழிந்து அத்தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

# வேலூர் மாநகராட்சி, காட்பாடி, அருப்புமேடு 12வது வார்டில், தமிழக அரசின் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்

## அமைச்சர் துரைமுருகன் பங்கேற்பு





வேலூர், செப்.12-

வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா, வேலூர் மாநகராட்சி, மண்டலம் 2, அருப்புமேடு, கனிஅமுது தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்ற தமிழக அரசின் "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாமை நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் பார்வையிட்டு, மனுதாரர்கள் விண்ணப்பித்து வழங்கிய, தகுதியுடைய பயனாளிகளுக்கு வகுப்பு சான்றிதழ், வீட்டு மனை பட்டா வழங்குதல், மின்சார துறை சார்ந்த வீட்டு மின் இணைப்பு பெயர் மாற்றம் ஆணை, வருமான சான்று உள்ளிட்ட சான்றிதழ்களை வழங்கினார். இந்நிகழ்வின்போது வேலூர் மாவட்ட ஆட்சியர் சுப்புலெட்சுமி, வேலூர் சட்டமன்ற உறுப்பினர் கார்த்திகேயன், மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், துணை மேயர் மா.சுனில்குமார், 1வது மண்டலக்குழுத் தலைவர் புஷ்பலதா வன்னியராஜா, உதயநிதி ஸ்டாலின் வெல்பர் அசோசியேஷன் ஒருங்கிணைந்த மாவட்டத் தலைவரும், 12வது வார்டு மாமன்ற உறுப்பினருமான டீட்டா. சரவணன், வட்டாட்சியர் ஜெகதீசன், துணை ஆணையார் புவனேஸ்வரன், சுகாதார அலுவலர் சிவகுமார், அரசு துறைகள் சார்ந்த அலுவலர்கள் பணியாளர்கள், மக்கள் பிரதிநிதிகள், 12வது வட்ட திமுக பொறுப்பாளர் கே.பி.ஆர்.ராஜுபாய், 6 வார்டு வட்ட செயலாளர் சம்பந்தம், 11 வார்டு வட்ட திமுக செயலாளர் ரஜினி, 13 வது வார்டு வட்ட திமுக செயலாளர் சரண்யா, 8 வார்டு வட்ட திமுக செயலாளர் சசிகுமார், காட்பாடி பகுதி திமுக செயலாளர் ஸ்டீல் ஒர்க் இன்ஜினியர் ரமேஷ் மற்றும் திமுக நிர்வாகிகள், பொறுப்பாளர்கள், உறுப்பினர்கள் உட்பட பலர் உடனிருந்தனர். இந்த முகாமில் வருவாய்த்துறை, மாற்றுத்திறனாளி நலத்துறை, குடிநீர் வடிகால் வாரிய துறை, இ சேவை மையம், மருத்துவம் மற்றும் நல வாழ்வு துறை, மின்சாரத்துறை, மகளிர் உரிமை தொகை வழங்கும் துறை, சமூக நலத்துறை, உள்ளிட்ட அனைத்து துறை அலுவலர்கள் கலந்து கொண்டு பொதுமக்களின் மனுக்களை பெற்று இணையதளத்தில் பதிவேற்றம் செய்தனர். பதிவேற்றம் செய்த மனுக்களின் மீது தீர்வு காணும் விதத்தில் தகுதியுடைய மனுதாரர்களுக்கு ஆவண ஆணைகளை வழங்கினர்.



# தேவகோட்டைஆனந்தா கல்லூரி வணிகவியல் துறை மன்றக் கூட்டம்

தேவகோட்டை, செப்.12-

சிவகங்கை மாவட்டம்தேவகோட்டை ஆனந்தா கல்லூரியில் வணிகவியல் துறை சார்பாக மன்றக் கூட்டம் கல்லூரியின் செயலர் அருட்தந்தை முனைவர் செபாஸ்டியன், முதல்வர் அருட்தந்தை ஜார்ஜ் பெர்னாண்டஸ் ஆகியோர்கள் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்விற்கு சிறப்பு விருந்தினராக ஸ்டாலின் வழக்குரைஞர் கலந்து கொண்டு சட்ட விளைவுகள் குறித்தும், சட்டத்திற்கு முன்பாக அனைவரும் சமம் என்பதையும் மற்றும் சட்ட விழிப்புணர்வு பற்றிய கருத்துக்களை எடுத்துரைத்ததோடு மேலும் மாணாக்கர்கள் வாழ்க்கையின் குறிக்கோளினைத் தேர்வு செய்து பயணித்தால் தான் வெற்றி பெற முடியும் என்று எடுத்துரைத்தார்.

துறை மாணாக்கர்கள், துறைப் பேராசிரியர்கள், துணை முதல்வர்கள் ஆகியோர்கள் பங்கேற்று சிறப்பித்தனர்.



# திருப்பூர் மாநகராட்சி அதிரடி நடவடிக்கை. மாசு ஏற்படுத்தும் கழிவுகளை சாக்கடையில் கலந்த தொழிற்சாலைகள் மீது நடவடிக்கை

திருப்பூர், செப்.12-

திருப்பூர் மாநகராட்சி நிர்வாகம் மண்டலம் இரண்டு. நிர்வாகத்தில் ஆய்வு செய்து போது. வார்டு 8 கங்கா நகர் பிரதான சாலையில் உள்ள .தனியார் பனியன் தொழில் நிறுவனத்தை சார்ந்த தொழிற்சாலை நிறுவனத்தில் இருந்து பிரதான சாலையில் உள்ள பாதாள சாக்கடையில் மாநகராட்சியின் முன் அனுமதி எதுவும் பெறாமல் விதிகளுக்கு மாறாக மாநகராட்சி சாலைகளை சேதப்படுத்திய இது போன்ற குறைபாடுகளை கண்டறியப்பட்டு அந்த தொழிற்சாலை இணைப்புகளை துண்டிக்கப்பட்டு அந்த தனியார் நிறுவனத்தின் மீது மாநகராட்சி ஒரு லட்ச ரூபாய் அபராதமாக விதிக்கப்பட்டது. தொகையை வசூலிக்கப்பட்டது. என்பதை மாநகராட்சி நிர்வாகம் நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதை தெரிவித்துக் கொண்டனர்..

"உங்களுடன் ஸ்டாலின்" சிறப்பு திட்ட முகாமானது வருகின்ற 12.9.2025 அன்று

# மானாமதுரை, தேவகோட்டை நகராட்சி, பள்ளத்தூர் பேரூராட்சி, சிவகங்கை, கல்லல் ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவைகளில் குறிப்பிட்ட பகுதிகளுக்கான முகாம்கள், குறிப்பிட்ட பகுதிகளில் நடைபெறவுள்ளது

## மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி தகவல்

சிவகங்கை, செப்.12-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ள "உங்களுடன் ஸ்டாலின்" சிறப்பு திட்ட முகாமானமது, சிவகங்கை மாவட்டத்தில் 15.7.2025 அன்று முதல் செப்டம்பர் 2025 வரை ஒவ்வொரு வாரமும், நான்கு நாட்களில் நாள் ஒன்றுக்கு 6 முகாம் வீதம் மொத்தம் 215 முகாம்கள் நடைபெறவுள்ளது.

அதன்படி, 15.7.2025 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டுள்ள "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாமினை தொடர்ந்து, வருகின்ற செப்டம்பர் 12 ஆம் தேதி மானாமதுரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்: 22 மற்றும் 23 ஆகிய பகுதிகளுக்கென இராமேஸ்வரம் மெயின்ரோட்டில் அமைந்துள்ள சீனியப்பா மஹாலிலும், தேவகோட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்: 20 மற்றும் 21 ஆகிய பகுதிகளுக்கென தேவகோட்டை நகர், தீ ஊரணி மேற்கு பகுதியில் அமைந்துள்ள வைரம் மஹாலிலும், பள்ளத்தூர் பேரூராட்சிக்குட்பட்ட வார்டு எண்: 08 முதல் 15 வரை உள்ள பகுதிகளுக்கென பள்ளத்தூர் காமராஜர் நகரில் அமைந்துள்ள சமூதாயக்கூடத்திலும், சிவகங்கை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட மாங்குடி தெற்குவாடி, குடஞ்சாடி ஆகிய ஊராட்சி பகுதிகளுக்கென மாங்குடி தெற்குவாடி ஊராட்சியில் அமைந்துள்ள சமுதாயக்கூடத்திலும், கல்லல் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட குருந்தம்பட்டு, தேவபட்டு ஆகிய ஊராட்சி பகுதிகளுக்கென குருந்தம்பட்டு ஊராட்சியில் அமைந்துள்ள பத்மினி திருமண மண்டபத்திலும் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமானது நடைபெறவுள்ளது.

மேலும், "உங்களுடன் ஸ்டாலின்" முகாம்களின் வாயிலாக, நகர்புறம் மற்றும் கிராமப்புறங்களில் அந்தந்த துறைகளால் சேவைகள் வழங்கப்படும். அதில், நகர்புறங்களில் நடத்தப்படும் முகாம்களில் 13 துறைகளின் மூலம் 43 சேவைகளும், கிராமப்புறங்களில் நடத்தப்படும் முகாம்களில் 15 துறைகளின் மூலம் 46 சேவைகளும் வழங்கப்படவுள்ளது.

இதில் சொத்துவரி, குடிநீர் வசதி உரிமங்கள் மற்றும் அனுமதி, கழிவு நீர் இணைப்பு, அடிப்படை வசதிகள், பராமரிப்பு, பிறப்பு இறப்பு சான்றிதழ்கள், காலி நிலவரி, தெரு வியாபாரி அடையாள அட்டை, சொத்து வரி பெயர் மாற்றம் மற்றும் கட்டிட அனுமதி பெறுவதற்கான விண்ணப்பம் ஆகியவைகள் நகர்புற நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் வாயிலாக வழங்கப்படவுள்ளது.

மேலும், பட்டாவில் பெயர் மாற்றம் மற்றும் பட்டா பெயர் திருத்தம், பட்டா சிட்டா நகல், பிறப்பு, இறப்பு சான்று வாரிசு சான்றிதழ், சாதிச் சான்றிதழ், இருப்பிடச் சான்றிதழ் உள்ளிட்ட மனுக்களுக்கு இம்முகாமில் உடனடி தீர்வு காணும் வகையில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. அதுமட்டுமன்றி, குறிப்பாக கலைஞர் மகளிர் உரிமைத்திட்டத்தில் மனு அளித்திட விடுபட்ட தகுதியுள்ள பயனாளிகளும் இம்முகாம்களில் உரிய ஆவணங்களுடன் கலந்து கொண்டு மனு அளிக்கலாம்.

எனவே, இம்முகாமினை முறையாக பயன்படுத்திக் கொண்டு, தாங்கள் வசிக்கும் அந்தந்த பகுதியில் முகாம் நடைபெறும் நாளன்று, உரிய ஆவணங்களுடன் தங்களது கோரிக்கை மனுக்களை அளித்து பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி தெரிவித்துள்ளார்.





# தேவகோட்டைஆனந்தா கல்லூரி யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் தேர்வு பயிற்சி கருத்தரங்கம்

தேவகோட்டை, செப்.12-

சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை ஆனந்தா கல்லூரியில் யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் தேர்வு பயிற்சி கருத்தரங்கம் கல்லூரியின் செயலர் அருட்தந்தை முனைவர் செபாஸ்டியன், முதல்வர் அருட்தந்தை ஜார்ஜ் பெர்னாண்டஸ் ஆகியோர்கள் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்விற்கு சிறப்பு விருந்தினராக மதுரை சங்கர் ஐஏஎஸ் அகாடமியின் கிளை மேலாளர் அர்ஜுன்நாதன் பேசுகையில், இன்றைய காலகட்டத்தில் மாணாக்கர்கள் போட்டிகள் நிறைந்த உலகில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் ஆகையால் குறுகிய காலத்தில் அரசு பணியினை பெற வேண்டும் என்று நினைத்தால் அது போட்டி தேர்வுகளின் வழியாகவே கிடைக்கும் என்பது நிதர்சனம் இதனை உணர்ந்து மாணாக்கர்கள் படிப்பில் கவனம் செலுத்தி வாழ்க்கையில் உயர வேண்டும் என்றும் யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் தேர்வுக்கான வழிமுறைகள், தேர்வின் விதிமுறைகள் வெற்றி பெற எடுத்துக் கொள்ளக்கூடிய பயிற்சி முறைகள் ஆகியவற்றை எடுத்துரைத்ததோடு மாணாக்கர்களின் வினாக்களுக்கும் விடையளித்தார். இந்நிகழ்வினை கல்லூரியின் கல்வி முதன்மையர் முனைவர் சிவ பாலாஜி, வேலை வாய்ப்பு துறையின் ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் ஜான் கென்னடி ஆகியோர்கள் செய்திருந்தனர். இந்நிகழ்வில் அனைத்து இறுதி ஆண்டு பயிலும் மாணவர்களும் முதுகலை மாணாக்கர்களும் துறை மாணாக்கர்கள், துறைப் பேராசிரியர்கள், துணை முதல்வர்கள் ஆகியோர்கள் பங்கேற்று சிறப்பித்தனர்.



# தாம்பரம் மாநகராட்சி 5 வது மண்டலம் 68,69 வார்டு மக்களுக்கான உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்

## தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர் ராஜா, மேயர் வசந்தகுமாரி, துணை மேயர் காமராஜ் ஆகியோர் பங்கேற்ப்பு

தாம்பரம், செப்.12-

சென்னை அடுத்த தாம்பரம் மாநகராட்சி 5 வது மண்டலம் 68,69 வார்டு மக்களுக்கான உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் நடைபெற்றது. முகாமில் தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா, மேயர் வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ், மண்டல குழு தலைவர் எஸ்.இந்திரன் ஆகியோர் கலந்து கொண்டு முகாமில் மனுக்கள் பதிவு செய்வதை பார்வையிட்டனர்

பின்னர் கர்ப்பிணி பெண்களுக்கு ஊட்டசத்து பொருட்கள் அடங்கிய பெட்டகம் வழங்கினர். பின்னர் மருந்து பெட்கம், முகாமில் விண்ணபித்த மனுக்கள் மீது தீர்வு கானபட்ட மனுக்களுக்கு உரிய சான்றிதழ்கள் வழங்கப்பட்டது. உங்களுடன் ஸ்டாலின் முகாமில் மருத்துவ துறை, சுகாதாரதுறை, வருவாய் துறை, இ சேவை மையம், மகளீர் உரிமை திட்டம் பல்வேறு துறைகளில் பொது மக்கள் தங்கள் மனுக்கள் பூர்த்தி செய்து உரிய அலுவலர்களிடம் வழங்கினார். முகாமில் உதவி ஆணையர் ராஜலஷ்மி, மாமன்ற உறுப்பினர்கள் நடராஜன், ரமாதேவி செந்தில், வாட்டர் கே.ராஜ் மற்றும் அரசு துறை சார்ந்த அலுவலர்கள், திமுக நிர்வாகிகள் சாம்சன், திவாகர் மற்றும் பொது மக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

# இராமநாதபுரம் மாவட்டம், சாயல்குடி வட்டாரத்திற்குட்பட்ட அரசினர் பெண்கள் மேல்நிலைப்பள்ளி, சாயல்குடியில் (13.09.2025) "நலம் காக்கும் ஸ்டாலின்" முகாம்

இராமநாதபுரம், செப்.12-

மக்களைத் தேடி மருத்துவம், இன்னுயிர் காப்போம், நம்மைக் காக்கும் 48, வருமுன் காப்போம். இதயம் காப்போம், நடப்போம் நலம் பெறுவோம், மக்களைத் தேடி மருத்துவ ஆய்வக திட்டம். தொழிலாளர்களைத் தேடி மருத்துவ திட்டம். சிறுநீரகம் பாதுகாக்கும் சீர்மிகு திட்டம். புற்றுநோய் கண்டறியும் பரிசோதனைகள் என்று மிகப்பெரிய அளவிலான சிறப்பு திட்டங்கள் செயல்பட்டு வருகிறது. அந்த வகையில் நலம் காக்கும் ஸ்டாலின் எனும் திட்டம் மக்களைத் தேடி முழு உடல் பரிசோதனை திட்டம் என்கிற வகையில் செயல்படுத்தப்பட்டுள்ளது.

முழு உடல் பரிசோதனை செய்து கொள்வதற்கு தனியார் மருத்துவமனைகளில் ரூ.15,000 வரையிலும், அரசு மருத்துவமனைகளில் ரூ.4,000 வரை செலவாகும். முழு உடற்பரிசோதனை என்பது இன்றைய காலகட்டத்தில் மக்களுக்கு மிகவும் அவசியமான ஒன்றாகும். இந்த திட்டத்தை பொறுத்த வரை பொது மருத்துவம் பொது அறுவை சிகிச்சை மருத்துவம். எலும்பியல் மருத்துவம், மகப்பேறுயியல் மற்றும் மகளிர் மருத்துவம், குழந்தை மருத்துவம், இருதயவியல் மருத்துவம், நரம்பியல் மருத்துவம், தோல் மருத்துவம், பல் மருத்துவம், கண் மருத்துவம், காது, மூக்கு மற்றும் தொண்டை மருத்துவம். இயன்முறை மருத்துவம். நுரையீரல் மருத்துவம். இந்திய முறை மருத்துவம் ஆகிய அனைத்தும் இதில் இடம்பெற இருக்கிறது.

மேலும், இந்த முகாமில் அந்தந்த பகுதியைச் சேர்ந்த மாற்றுத்திறனாளிகளுக்கு எத்தனை சதவீதம் பாதிப்பு ஏற்பட்டு இருக்கிறது என்பதை கண்டறிந்து அங்கேயே சான்றிதழ் அவர்களுக்கு வழங்கப்பட உள்ளது மற்றும் புதிதாக முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீடு திட்டத்திற்கு இணைவதற்குரிய வசதிகளும் ஏற்பாடு செய்யப்பட உள்ளது.

இந்த நலம் காக்கும் ஸ்டாலின் திட்டத்தின் சிறப்பு மருத்துவ அறிக் கைகள் அனைத்தும் ர்ஜஆளு 3.0 மூலம் கணிணிமயமாக்கப்பட உள்ளது. எனவே, பொது மக்கள் அனைவரும் இந்த சிறப்பு மருத்துவ முகாமில் கலந்து கொண்டு பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிம்ரன்ஜீத் சிங் காலோன்,இ.ஆ.ப., அவர்கள்; செய்தி குறிப்பில் தெரிவித்துள்ளார்.

# டாக்டர் ராதாகிருஷ்ணன் விருது பெற்ற ஆசிரியர்களை கௌரவிக்கும் நிகழ்வில்,

## தனியார் பங்களிப்புடன் (ஐடிபிஐ வங்கி) பள்ளிக்கல்வித்துறைக்கென ரூபாய் 4.50 இலட்சம் மதிப்பீட்டில் வழங்கப்பட்ட பல்வேறு வகையான உபகரணங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி வழங்கி தொடங்கி வைத்தார்

சிவகங்கை, செப்.12-

சிவகங்கை மாவட்டத்தைச் சார்ந்த டாக்டர் ராதாகிருஷ்ணன் விருது பெற்ற ஆசிரியர்களை கௌரவிக்கும் நிகழ்வில் தனியார் பங்களிப்புடன் (ஐடிபிஐ வங்கி) பள்ளிக்கல்வித் துறைக்கென வழங்கப்பட்ட பல்வேறு வகையான உபகரணங்களை, மருதுபாண்டியர் நகர் அரசு மேல்நிலைப்பள்ளி கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி,இ.ஆ.ப., அவர்கள் வழங்கி தொடங்கி வைத்தார்.



பள்ளிக்கல் வித்துறையின் சார்பில் சிவகங்கை மாவட்ட த்தைச் சார்ந்த மேல்நிலை, உயர்நிலைப்பள்ளி, நடுநிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள், பட்டதாரி, தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் என மொத்தம் 9 நபர்கள் டாக்டர் இராதாகிருஷ்ணன் விருது பெற்றுள்ளனர்.

அதில், கண்ணங்குடி அரசு மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியை திருமதி பாக்கியம், கோவிலூர் அரசு உயர்நிலைப்பள்ளி தலைமையாசிரியர் திரு.இராமர், சாக்கோட்டை அரசு உயர்நிலைப்பள்ளி பட்டதாரி ஆசிரியை திருமதி முருகேஸ்வரி, மணலூர் அரசு உயர்நிலைப்பள்ளி பட்டதாரி ஆசிரியர் திரு.முருகேசன், 48 காலனி நகராட்சி நடுநிலைப்பள்ளி தலைமையாசிரியை திருமதி மரிய செல்வி, மொட்டையன்வயல் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி தலைமையாசிரியை திருமதி விஜயா ராணி, சேம்பார் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி பட்டதாரி ஆசிரியர் திரு.சுரேஷ், பசியாபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி தலைமையாசிரியை திருமதி ரெஜினா ஞான செல்வி, மகரிஷி வித்யா மந்திர் மெட்ரிக் பள்ளி தலைமையாசிரியர் திரு.ரவிக்குமார் என சிவகங்கை மாவட்டத்தைச் சார்ந்த 9 ஆசியரியர்கள் டாக்டர் இராதாகிருஷ்ணன் விருது பெற்றுள்ளனர்.

அவ்வாறு விருது பெற்றுள்ள தலைமையாசிரியர் மற்றும் ஆசிரியர்களை கௌரவிக்கும் பொருட்டு, இன்றையதினம் சிவகங்கை மருதுபாண்டியர் அரசு மேல்நிலைப்பள்ளி கூட்டரங்கில் நடைபெற்ற விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் பாராட்டு விழா நடைபெற்றது. இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் விருது பெற்ற ஆசிரியர்களை வாழ்த்தி, பொன்னாடை அணிவித்து கௌரவித்தார்.

அந்நிகழ்வின் போது, டாக்டர் இராதாகிருஷ்ணன் விருது பெற்ற கோவிலூர் அரசு உயர்நிலைப்பள்ளி தலைமையாசிரியர் திரு.இராமர் அவர்கள் தான் பெற்ற விருதுடன் வழங்கப்பட்ட ரூபாய் 10 ஆயிரம் பரிசுத்தொகையினை, அப்பள்ளியின் மேம்பாட்டிற்கென வழங்கினார்.

அந்நிகழ்வில், ஐடிபிஐ வங்கியானது தனது பெருநிறுவன சமூக பொறுப்புணர்வு நிதியின் மூலம் குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரம், பிரிண்டர்ஸ், ப்ரோஜெக்டோர்ஸ் மற்றும் கரும்பலகைகள் என சுமார் ரூபாய் 4,50,000/ மதிப்பீட்டிலான மாணாக்கர்களுக்கு பயனுள்ள வகையிலான உபகரணங்களை

மாவட்டத்தில் உள்ள 13 அரசு உயர்நிலைப்பள்ளி மற்றும் மேல்நிலைப்பள்ளிகளுக்கு பயனுள்ள வகையில் வழங்கினர்.

அவ்வாறு வழங்கப்பட்ட பல்வேறு வகையான உபகரணங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் சம்மந்தப்பட்ட பள்ளி தலைமையாசிரியர்களிடம் வழங்கி தொடங்கி வைத்தார்.

இதேபோன்று, கடந்தாண்டும் ஐடிபிஐ வங்கியின் சார்பில், தனது பெருநிறுவன சமூக பொறுப்புணர்வு நிதியின் மூலம் 6 பள்ளிகளுக்கு சுமார் ரூபாய் 3,75,000/ மதிப்பீட்டில் மாணாக்கர்களுக்கு பயனுள்ள வகையிலான உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடதக்கதாகும்.

மாணாக்கர்களின் கற்றல் திறன் மேம்பாட்டிற்கென வழங்கப்படும் பொரு ட்களை மாணவர்களின் முழுப் பயன்பாட்டிற்கும், பாதுகாப்போடு பயன்படுத்துதல் குறித்து, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் பள்ளிக்கல்வி துறையை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் (பொ) திரு.மாரிமுத்து, ஐடிபிஐ வங்கி மேலாளர் திரு.கனகராஜ் (சிவகங்கை கிளை), மதுரை மண்டல ஒருங்கிணைப்பாளர் திரு.சிபி வர்கீஸ், துணை மேலாளர் திரு. சுர்ஜித் பாரதி, மாவட்ட உதவித்திட்ட அலுவலர் திரு.பீட்டர் லெமாயூ மற்றும் ஆசிரியர்கள், துறை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



# நகர்ப்புற வளர்ச்சியில் புனே நகரம் முதலிடம்: மூன்றாவது இடத்தில் சென்னை

புதுடெல்லி, செப்.12-

நகரங்களில் கட்டிடங்கள் அதிகரிக்கும் அளவை செயற்கைக்கோள் படங்களை கொண்டு கணக்கிட்டு 'ஸ்கொயர் யார்ட்ஸ்' என்ற ரியல் எஸ்டேட் இணையதளம் ஒன்று 'சிட்டிஸ் இன் மோஷன்' என்ற தலைப்பில் ஆய்வு ஒன்றை நடத்தியுள்ளது.

இதில் கூறப்பட்டுள்ளதாவது: இந்திய நகரங்களில் மகாராஷ்டிரா மாநிலத்தில் உள்ள புனே நகரம் கடந்த 30 ஆண்டுகளில் மிகப் பெரிய வளர்ச்சியை எட்டியுள்ளது. நகர்ப்புற எல்லை பல திசைகளில் விரிவடைந்து, தற்போது நகர்ப்புற வளர்ச்சியில் நாட்டில் முதல் இடத்தை பிடித்துள்ளது.

இரண்டாவது இடத்தை பெங்களூரு பிடித்துள்ளது. நமது சென்னை இந்த பட்டியலில் 3ம் இடத்தை பிடித்துள்ளது. இதே காலத்தில் கட்டிடங்களின் அளவு 197 சதுர கி.மீட்டரில் இருந்து 467 சதுர கி.மீஆக உயர்ந்துள்ளது. வாகனம், எலக்ட்ரானிக்ஸ், தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள், சரக்கு போக்குவரத்து ஆகிய துறைகளின் வளர்ச்சியால் சென்னையும் வளர்ச்சியடைந்தது.

டெல்லி தேசிய தலைநகர் மண்டலம், ஹைதராபாத், அகமதாபாத், கொல்கத்தா, மும்பை ஆகிய நகரங்களின் வளர்ச்சி சதவீதம் அடுத்தடுத்த இடத்தில் உள்ளது. இவ்வாறு அந்த ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



■ மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றியம் விளாச்சேரி ஆதிசிவன் நகரில் சற்குரு சுய உதவிக்குழுவினர் மானிய விலையில் வங்கி கடன் பெற்று மசாலாபொருட்கள் தயாரிக்கும் பணி செய்து வருவதை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.ஜே.பிரவீன் குமார் இ.ஆ.ப., அவர்கள் இன்று (1192025)பார்வையிட்டு பொருளாதார வளர்ச்சிக்கு உதவும் வகையில், அவர்கள் தயாரிப்புகளை டிஜிட்டல் தளங்களில் மூலம் சந்தைபடுத்துவதற்கான பயிற்சிகள் பெற்று மின்னனு முறையில் சந்தைப்படுத்தவும் அரசின் காலை உணவுத் திட்டம் உள்ளிட்ட திட்டங்களுக்கு மசாலா தொகுப்பினை தயாரித்து வழங்கவும் அறிவறுத்தினார்



■ மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றியம், சூரக்குளம் ஊராட்சியில் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை சார்பில் வேளாண் இயந்திரயமாக்குகளுக்கான துணை திட்டத்தின் கீழ் வாலநேந்தல் கிராமத்தை சேர்ந்த விவசாயி திரு.ரமே அவர்களுக்கு மானியத்தில் வழங்கப்பட்ட பவர் டில்லரின் பயன்பாடு மற்றும் விவசாயிகளுக்கு அவற்றால் ஏற்படும் பயன்கள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே.பிரவீன் குமார் ஆய்வு செய்தார்.



■ மதுரை மாவட்டம். திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றியம், சூரக்குளம் கிராமத்தில் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை சார்பில் தமிழ்நாடு விவசாய நிலங்களில் நீடித்த நிலையான பசுமை போர்வைக்கான இயக்கத் திட்டத்தின் கீழ் விவசாயி திரு.சக்திவேல் அவர்கள் 1.5 ஏக்கர் பரப்பளவில் வேளாண் காடுகள் வளர்க்கப்பட்டுள்ளதை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.ஜே.பிரவீன் குமார் பார்வையிட்டார்.

# ஐஐடி பட்டப்படிப்பிற்கு தேர்வாகியுள்ள சிவகங்கை மாவட்டத்தைச் சார்ந்த அரசு பள்ளி மாணவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றனர்

சிவகங்கை, செப்.12-

சிவகங்கை மாவட்டம், ஐஐடி பட்டப்படிப்பிற்கு தேர்வாகியுள்ள சிவகங்கை மாவட்டத்தைச் சார்ந்த அரசு பள்ளி மாணவர்கள், சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றனர்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவிக்கையில்,

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பள்ளிக்கல்வித்துறை மற்றும் உயர்கல்வித்துறைக்கென எண்ணற்ற திட்டங்களை தமிழகத்தில் சிறப்பாக செயல்படுத்தி, மாணாக்கர்களின் நலன் காத்து வருகிறார்கள். குறிப்பாக, மாணாக்கர்கள் இடைநிற்றலின்றி உயர்கல்வியினை பெற வேண்டும் என்ற உயரிய நோக்கில், புதுமைப்பெண் மற்றும் தமிழ்ப்புதல்வன் போன்ற திட்டங்களையும் தமிழகம் முழுவதும் சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள்.

அதனைத்தொடர்ந்து, உலகப் புகழ்பெற்ற ஐஐடி மெட்ராஸ் கல்வியை மாணாக்கர்கள் எளிதில் அணுகக்கூடியதாக மாற்றும் நோக்கில், "அனைவருக்கும் ஐஐடி மெட்ராஸ்" என்ற திட்டமும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

இத்திட்டமானது, தமிழ்நாடு அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணாக்கர்களுக்கு உயர்கல்வியில் புதிய வாய்ப்புகளை ஏற்படுத்திடவும், அவர்கள் ஐஐடி போன்ற முன்னணி கல்வி நிறுவனங்களில் பயில வழிவகுத்திடவும், திறமைசாலியான மாணவர்களை உருவாக்குவதை நோக்கமாகவும் கொண்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

மேலும், JEE நுழைவு தேர்வுக்கு அரசு பள்ளி மாணவர்களும் தயாராகி ஐஐடியில் சேரும் நிலையில், JEE நுழைவு தேர்வு மூலம் வாய்ப்பு கிடைக்காத மாணவர்களுக்கு ஐஐடி மெட்ராஸ் வழங்கும் B.S.Degree - Data Science (தரவு அறிவியல்) மற்றும் Electronic Systems (மின்னணு அமைப்புகள்) போன்ற பட்டப் படிப்புகளின் வாயிலாக ஐஐடி மெட்ராஸில் சேர்ந்து பயில்வதற்கான வாய்ப்பினை இத்திட்டம் உருவாக்கியுள்ளது.

இத்திட்டத்தின் கீழ், பதினொன்றாம் வகுப்பு முடித்து பன்னிரெண்டாம் வகுப்பிற்கு செல்லும் மாணாக்கர்களுக்கு, ஐஐடி மெட்ராஸ் மூலம் 4 வார கால பயிற்சி அளிக்கப்படும். அப்பயிற்சியினை தொடர்ந்து நடத்தப்படும் தகுதித் தேர்வில் தேர்ச்சி பெறும் மாணாக்கர்கள் ஐஐடி மெட்ராஸ் வழங்கும் 4 ஆண்டு கால இளங்கலை அறிவியல் (B.S Degree) பட்டப்படிப்பில் சேரும் வாய்ப்பினை பெறுவர். அதுமட்டுமன்றி, பன்னிரெண்டாம் வகுப்பு முடித்து, பிற கல்வி அமைப்புகளில் பயிலும் மாணாக்கர்களும் தங்கள் கல்லூரி படிப்புடன் IIT Madras வழங்கும் B.S. Degree படிப்பினை தொடரலாம்.

மேலும், பன்னிரெண்டாம் வகுப்பில் கணிதம் மற்றும் அறிவியலை அடிப்படைப் பாடமாகப் படிக்கும் மாணாக்கர்கள் மட்டுமின்றி, அனைத்து பாடப்பிரிவு மாணாக்கர்களும் நான்கு ஆண்டு கால B.S. Degree - Data Science ( தரவு அறிவியல்) பட்டப் படிப்பைப் படித்து,

மதிப்பெண் அடிப்படையில் நிகிஜிணி தேர்வு மூலம் ஐஐடியில் முதுகலை பட்டப் படிப்புகள் தொடரும் வாய்ப்பினையும் பெறலாம். அதேபோல், கணிதம் மற்றும் அறிவியலை அடிப்படைப் பாடமாக கொண்டு படிக்கும் மாணாக்கர்கள் நான்கு ஆண்டு கால B.S. Degree - Electronic Systems (மின்னணு அமைப்புகள்) பட்டப் படிப்பினையும் பயிலலாம்.

அனைவருக்கும் ஐஐடி மெட்ராஸ் குறித்து, முன்னதாக சிவகங்கை மாவட்டத்தில் அரசுப் பள்ளி மாணாக்கர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு ஐஐடி மெட்ராஸ் திட்ட ஒருங்கிணைப்பாளரை கொண்டு விழிப்புணர்வும் ஏற்படுத்தப்பட்டு, அனைத்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளிலும் இத்திட்டமானது செயல்படுத்தப்பட்டது.

அதனைத்தொடர்ந்து, மாநில அளவில் நடைபெற்ற முதல் நிலைத்தேர்வின் வாயிலாக சுமார் 500க்கும் மேற்பட்ட மாணவர்கள் தேர்தெடுக்கப்பட்டு, 8 மாவட்டங்களைச் சார்ந்த 29 மாணவ, மாணவியர்கள் இறுதி பட்டியலில் தேர்வாகியுள்ளனர்.

அதில், சிவகங்கை மாவட்ட இடைக்காட்டூர் அரசு மேல்நிலைப்பள்ளியைச் சேர்ந்த மாணவர்கள் செல்வன் அஸ்வின், செல்வன் பாலமுரு கானந்தம் மற்றும் திருப்புவனம் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியைச் சேர்ந்த மாணவன் செல்வன் சரண்ராஜ் என மொத்தம் 3 மாணவர்கள் தேர்வாகியுள்ளனர் என்பது பெருமைக்குரிய ஒன்றாகும். தங்களது கடின உழைப்பினைக்கொண்டு சிறந்த முறையில் பயின்று, ஐஐடி பட்டப்படிப்பிற்கு தேர்வாகியுள்ள சிவகங்கை மாவட்டத்தைச் சார்ந்த அரசு பள்ளி மாணவர்களுக்கும், அம்மாணவர்களை ஊக்கப்படுத்தி, சிறந்த வழிகாட்டுதல்களை கொடுத்த பள்ளி தலைமையாசிரியர் மற்றும் ஆசிரிய பெருமக்களுக்கும் என வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

இதுபோன்று, தமிழக அரசின் சார்பில் செயல்படுத்தப்படும் திட்டங்களை மாணாக்கர்கள் தங்களுக்கு பயனுள்ளதாக பயன்படுத்திக் கொண்டு, சிறந்த முறையில் உயர்கல்வியினை பயின்று, வாழ்வில் சிறந்து விளங்கிட வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் (பொ) மாரிமுத்து, இடைக்காட்டூர் அரசு மேல்நிலைப்பள்ளி மற்றும் திருப்புவனம் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



## பழனியில் தெரு நாய்களை கட்டுப்படுத்த கோரி, பழனி நகராட்சியில் தேமுதிக சார்பில் கோரிக்கை மனு அளிக்கப்பட்டது

திண்டுக்கல், செப்.12-

திண்டுக்கல் மாவட்டம் பழனியில் தெரு நாய்கள் பிரச்சனை அதிகரித்து வருவதை தொடர்ந்து, திண்டுக்கல் மேற்கு மாவட்ட கழக செயலாளர் எம் சிவக்குமார் அவர்களின் ஆலோசனயின்படி பழனி கிழக்கு ஒன்றிய கழகச் செயலாளர் எஸ் பி செல்வராஜ், ஒன்றிய கழக அவைத் தலைவர் மணிகண்டன், பொருளாளர் துரைராஜ் மற்றும் ஒன்றிய நிர்வாகிகள் ரமேஷ், கருப்பு சாமி, பேரூர் நிர்வாகிகள் யாசர் அராபத் மற்றும் வாகாப்பு, ராமர், நகர செயலாளர் இ.எஸ். ஐயப்பன், அவைத் தலைவர் துரை ரவி, பொருளாளர் ஜோதி, மற்றும் கோபி,ரித்திஸ், சேம்பர் செல்வம், எலக்ட்ரிக் ரவி, ஆகியோர் கலந்து கொண்டு நகர்மன்ற தலைவர் உமா மகேஸ்வரி யிடம் மனு அளித்தனர்.

இதனைத் தொடர்ந்து நகர்மன்ற தலைவர் உமா மகேஸ்வரி தெருநாய்கள் கட்டுப்படுத்துவது பற்றி விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என தேமுதிக பொறுப்பாளர்களிடம் உறுதியளித்தார்.

தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியத்தால் நடத்தப்படும் இரண்டாம் நிலைக் காவலர், இரண்டாம் நிலை சிறைக் காவலர் மற்றும் தீயணைப்பாளர் பணியிடங்களுக்கான தேர்விற்கு,

## வருகின்ற 12.9.2025 முதல் சிவகங்கை மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் இலவசப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படவுள்ளது

மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி தகவல்

சிவகங்கை, செப்.12-

மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் செயல்படும் தன்னார்வப் பயிலும் வட்டம் வாயிலாக பல்வேறு போட்டித்தேர்வுகளுக்கு இலவசப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகிறது.

அந்த வகையில், தற்போது தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியத்தால் இரண்டாம் நிலைக் காவலர், இரண்டாம் நிலை சிறைக் காவலர் மற்றும் தீயணைப்பாளர் உள்ளிட்ட மொத்தம் 3,665 காலிப்பணியிடங்கள் அறிவிக்கப்பட்டுள்ளது. இத்தேர்விற்கான இலவசப் பயிற்சி வகுப்புகள் வருகின்ற 12.9.2025 முதல் சிவகங்கை மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் காலை 10.30 மணி முதல் பிற்பகல் 01.30 மணி வரை நடைபெறவுள்ளது.

மேலும், தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியத்தால் நடத்தப்படும் இரண்டாம் நிலைக் காவலர், இரண்டாம் நிலை சிறைக் காவலர் மற்றும் தீயணைப்பாளர் தேர்விற்கு விண்ணப்பிப்பதற்கு, விண்ணப்பதாரர் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும். 01.07.2025 அன்றைய தேதியில் குறைந்தபட்சம் 18 வயது பூர்த்தியடைந்தவராக இருத்தல் வேண்டும். பொதுப்பிரிவினருக்கு அதிகபட்ச வயது வரம்பு 26 ஆகும். மேலும், இதர பிரிவினருக்கு வகுப்பு வாரியாக அரசின் விதிமுறைகளுக்குட்பட்டு வயது வரம்பு தளர்வு வழங்கப்பட்டுள்ளது.

இத்தேர்விற்கு, வருகின்ற 21.9.2025 ஆம் தேதி வரை www.tnusrb.tn.gov.in என்ற இணையதளத்தின் வாயிலாக விண்ணப்பிக்கலாம். மேலும், இத்தேர்வு தொடர்பான கூடுதல் விபரங்களுக்கு www.tnusrb.tn.gov.in என்ற இணையதள முகவரியினை பயன்படுத்தி விபரங்கள் அறிந்து கொள்ளலாம்.

மேலும், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் செயல்படும் தன்னார்வப் பயிலும் வட்ட நூலகத்தில் TNPSC, TNUSRB, TRB, SSC, RRB, BANKING ஆகிய அனைத்து வகையான போட்டித்தேர்வுகளுக்கான புத்தகங்கள், மாதாந்திர சஞ்சிகைகள், தினசரி செய்தித்தாள்கள் பராமரிக் கப்பட்டு வருகின்றன. இந்நூலகத்தை வேலைநாடுநர்கள் பயன்படுத்தி கொள்ளலாம். போட்டித்தேர்வுகளுக்குத் தயார் செய்து வருகின்ற இளைஞர்கள் பயன்பெறும் வகையில், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையின் சார்பில் தொடங்கப்பட்டுள்ள www.tamilnaducareer-services.tn.gov.in என்ற இணையதள முகவரியில், இளைஞர்கள் இலவசமாக பதிவு மேற்கொண்டு, மத்திய மாநில அரசுகளால் நடத்தப்படும் போட்டித் தேர்வுகளுக்கான பாடக்குறிப்புகள் மற்றும் மாதிரி வினாவிடைகள் ஆகியவற்றை இலவசமாகப் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். மேலும், இலவச பயிற்சி வகுப்புகளில் கலந்து கொள்ள விரும்பும் வேலைநாடுநர்கள் 04575 240435 என்ற அலுவலக தொலைபேசி எண்ணிலோ அல்லது மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்திற்கு நேரில் வருகை புரிந்தோ தங்களது பெயரைப் பதிவுசெய்து கொள்ளலாம்.

எனவே, தகுதியான வேலைநாடுநர்கள் மேற்காணும் தேர்விற்கு குறிப்பிட்ட இணையதளத்தின் வாயிலாக விண்ணப்பம் செய்து, பயிற்சி வகுப்புகளில் கலந்து கொண்டு தேர்வுகளில் வெற்றி பெற்று, வேலைவாய்ப்பினை பெற்று பயனடையலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி தெரிவித்துள்ளார்.

## பெருங்களத்தூர் அன்னை வேளாங்கண்ணி பொறியியல் கல்லூரியில் யோகசன பயிற்ச்சி

பிரபல யோகாசன பயிற்ச்சியாளர் சு.கி.இளம்பரிதி மாணவர்களுக்கு யோகாசன பயிற்ச்சி




பெருங்களத்தூர், செப்.12-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் அடுத்த பெருங்களத்தூர் அன்னை வேளாங்கண்ணி பொறியியல் கல்லூரியில் யோகாசன பயிற்ச்சிகள் தாளாளர் சந்திரசேகர பாண்டியன் தலைமையில் உள் விளையாட்டு அரங்கில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக பிரபல யோகாசன பயிற்ச்சியாளர் சு.கி.இளம்பரிதி கலந்து கொண்டு மாணவர்களுக்கு உடல் சீராகவும் உடல் உறுப்புகளின் செயல் பாடுகள் நன்றாக இயங்க பல்வேறு யோகாசனகளை மாணவர்களுக்கு பயிற்ச்சி அளித்து அதனை தினமும் காலையில் செய்யுமாறு வலியுறுத்தினார். நாம் வாழும் காலம் வரை நோய் நொடியின்றி வாழ யோகாசனம் சிறந்தது என தெரிவித்தார். இதில் கல்லூரி முதல்வர் ஆர்.ரவிகுமார், முதன்மை செயல் அதிகாரி ஆர்.ஜெயகிருஷ்ணன், கல்லூரி துனை முதல்வர் எம்.திருப்பதி மற்றும் ஆசிரிய பெருமக்கள் உட்பட ஏராளமான மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி அறிவுரையின்படி, தமிழ் வளர்ச்சித்துறையின் சார்பில் நடைபெற்ற

## ஆட்சிமொழிப் பயிலரங்கம் கருத்தரங்கம் நிகழ்ச்சியில் பங்கேற்ற அரசுப் பணியாளர்களுக்கு பங்கேற்புச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டது



சிவகங்கை, செப்.12-

சிவகங்கை மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி அறிவுரையின்படி, தமிழ் வளர்ச்சித்துறையின் சார்பில் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற ஆட்சிமொழிப் பயிலரங்கம் கருத்தரங்கம் நிகழ்ச்சியில் பங்கேற்ற அரசுப் பணியாளர்களுக்கு பங்கேற்புச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டது .

இந்நிகழ்ச்சி குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவிக்கையில்,

உலக மொழிகளில் தாய்மொழியான தமிழ்மொழி சிறந்து விளங்குகிறது. சங்ககாலங்களில் வாழ்ந்த தமிழர்கள் நாகரிகத்துடனும், தொன்மையான தமிழ்மொழி தூய்மையான வடிவங்களில் வடிவமைப்பதற்கு வரலாற்று சிறப்பு மிக்க கீழடி யில் கண்டெடுக்கப்பட்ட தொல்பொருட்கள் மற்றும் அவர்களால் பொறிக்கப்பட்ட தமிழ் மொழிகளும் சான்றாக விளங்குகிறது. மேலும், தமிழுக்கு சிறப்பு சேர்க்கின்ற வகையில், பாரதியார், பாரதிதாசன் உள்ளிட்ட கவிஞர்களும் கவிதை வடிவில் தமிழுக்கு சிறப்பு சேர்த்துள்ளனர்.

தாய்மொழி என்பது அவரவர் மாநிலத்தில் போற்றி பாதுகாக்கக்கூடிய ஒன்றாகும். மற்ற மொழிகள் என்பது அலுவல் ரீதியான பயன்பாட்டிற்கு மட்டுமே இருந்து வரும் நிலையில், தாய்மொழி என்பது நிலையான ஒன்றாக திகழ்ந்து வரக்கூடியதாகும். அத்தகைய மொழியினை போற்றிப் பாதுகாத்திடும் வகையில், ஒவ்வொரு ஆண்டும் ஆட்சிமொழி கருத்தரங்கம் நடத்தப்பட்டு, அதன் வாயிலாக தாய்மொழியின் மாண்புகள் குறித்து எடுத்துரைக்கப்பட்டு வருகின்றன.

தமிழ்மொழி என்பது பல்வேறு இலக்கியங்கள் மற்றும் புராணங்களை பெற்றுத்தந்த மொழியாகும். அத்தகைய தமிழ்மொழியை பாதுகாப்பது ஒவ்வொருவரின் பங்காகும். தாய்நாட்டில் முழுமையாக பேச்சு முதல் கோப்புகள் பராமரிப்பு வரை தமிழ்மொழியை பின்பற்றி பாதுகாப்பதுடன், வருங்காலச் சந்ததியினருக்கு நீங்கள் ஒரு முன்மாதிரியாக திகழ்ந்திட வேண்டும். அனைத்துத்துறைகளும் இதனைப் பின்பற்றி சிறப்பாக செயல்பட வேண்டும். தமிழ்வளர்ச்சித் துறையின் சார்பில் நடத்தப்பட்ட ஆட்சிமொழிப் பயிலரங்கம் கருத்தரங்கமானது, பல்வேறு நிகழ்ச்சிகளுடன் 9.9.2025 மற்றும் 10.9.2025 ஆகிய தினங்கள் நடத்திட திட்டமிடப்பட்டு, இரு தினங்களும் சிறப்பாக நடைபெற்றது. இப்பயிலரங்கம் கருத்தரங்கத்தில் அரசுப் பணியாளர்களுக்கு ஆட்சிமொழி வரலாறு சட்டம், அட்சிமொழிச் செயலாக்கம் அரசாணைகள், கணினித் தமிழ், மொழிபெயர்ப்பும் கலைச்சொல்லாக்கமும், மொழிப்பயிற்சி, அலுவலகக் குறிப்புகள், வரைவுகள், செயல்முறை ஆணைகள் அணியம் செய்தல், ஆட்சிமொழி ஆய்வும், குறைகளைவு நடவடிக்கைகளும் ஆகிய தலைப்புகளின் கீழ் பயிற்சி அளிக்கப்பட்டது. ஆட்சிமொழிப் பயிலரங்கம் கருத்தரங்கம் நிகழ்ச்சியில் பங்கேற்ற அரசுப் பணியாளர்களுக்கு பங்கேற்புச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டது.

எனவே, தாய்மொழியை காப்பதும் அதன் மூலம் அலுவலக செயல்பாடுகளை செயல்படுத்துவதும் என ஒவ்வொன்றையும் முழுமையாக பின்பற்றி அனைவரும் தமிழ்மொழியை பாதுகாத்திட வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி கா.பொற்கொடி தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.முத்துக்கழுவன், தமிழ் வளர்ச்சித்துறை உதவி இயக்குநர் (மு.கூ.பொ) திருமதி ச.சீதாலெட்சுமி, கவிஞர் கும.திருப்பதி, புலவர் கா.காளிராசா, மனிதவள மேம்பாட்டு பயிற்றுநர் / நிறுவனர் திரு.மு.செல்வக்குமார், ஸ்ரீ பாரதி மகளிர் கலை (ம) அறிவியல் கல்லூரி மதிப்புறு பேராசிரியர் முனைவர் மு.பாலசுப்ரமணியன், புதுக்கோட்டை மாமல்லன் ஐ.ஏ.எஸ் அகாதெமி நிறுவனர் முனைவர் ப.செந்தில் முருகன், திருக்குறள் தேனீ திரு.மெ.செயம்கொண்டான், பட்டதாரி தமிழாசிரியர் முனைவர் மகா.சுந்தர், முனைவர் இரா.கண்ணதாசன், முனைவர் மா.சிதம் பரம் மற்றும் அரசு அலுவலர்கள், பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## மாநில துணைப் பொதுச் செயலாளராக த.அமிர்தகுமார் நியமனம்



சிவகங்கை, செப்.12-

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி வட்டம் பனங்குடி பஞ்சாயத்து திருத்திப்பட்டியைச் சேர்ந்த முன்னாள் கிராம நிர்வாக அதிகாரியான எம். ராஜேந்திரன் மகனான இரா. அருள்ராஜ் ஒரு கப்பல் பொறியாளராக வேலை பார்த்தவர். தற்போது இவர் சேதுரகுநாதபட்டினம் என்ற கிராமத்தில் கிராம நிர்வாக அதிகாரியாக பணியாற்றி வருகிறார். இவர் கிராம நிர்வாக அலுவலர் சங்கம் தமிழ்நாட்டின் மாநில தலைவர் பொறுப்பாகவும், மாநில பொது செயலாளர் பதவி வகித்து வருகிறார். தமிழக அரசால் அங்கீகரிக்கப்பட்ட நூற்றாண்டு பாரம்பரியமிக்க தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியத்தின் மாநில செயலாளராகவும் பதவி வகித்து வந்தார். இந்நிலையில் சேலத்தில் நடந்த மாநில பொதுக்குழு கூட்டத்தில் ஒன்றியத்தின் மாநிலத் தலைவர் த.அமிர்தகுமார் இவருக்கு மாநில துணைப் பொதுச் செயலாளராக, நியமனம் செய்து பதவி ஏற்பு செய்தார். இவருக்கு மாநில தலைவர் உட்பட அனைத்து மாவட்ட, மாநில நிருவாகிகள்,பொதுமக்கள் உள்ளிட்டோர் வாழ்த்துக்களை தெரிவித்து வருகிறார்கள்.

## பொது விநியோகத்திட்டத்தின் கீழ் வருகின்ற 13.9.2025 அன்று சிவகங்கை மாவட்ட முழுவதும் அனைத்து வட்ட வழங்கல் அலுவலகங்களிலும் சிறப்பு முகாம்

சிவகங்கை, செப்.12-

சிவகங்கை மாவட்டம் பொது விநியோகத்திட்டத்தில் 2025ம் ஆண்டு செப்டம்பர் மாதத்திற்கான மக்கள் குறைதீர்க்கும் சிறப்பு முகாம் வருகின்ற 13.9.2025 (சனிக்கிழமை) அன்று காலை 10.00 மணி முதல் மதியம் 01.00 மணி வரை சிவகங்கை மாவட்டம் முழுவதும் அனைத்து வட்ட வழங்கல் அலுவலகங்களிலும் நடைபெறவுள்ளது.

இம்முகாமில் குடும்ப அட்டையில் பெயர் சேர்த்தல், பெயர் நீக்கம், முகவரி மாற்றம், புதிய குடும்ப அட்டை / நகல் அட்டை, கைப்பேசி எண் பதிவு / மாற்றம் செய்தல் மற்றும் பொது விநியோக கடைகளின் செயல்பாடுகள் மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் தரம் குறித்த புகார்களை தெரிவிக்கும் பொருட்டும் பொதுமக்கள் தாங்கள் குடியிருக்கும் வட்டத்தில் அந்தந்த வட்ட வழங்கல் அலுவலகத்தில் மனு செய்து பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி தெரிவித்துள்ளார்.

## புத்தாக்கத் தொழில் வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் தமிழக கூடுதல் தலைமைச் செயலர் ஜெ.ராதாகிருஷ்ணன் பேசினார்




தாம்பரம், செப்.12-

கல்லூரியில் புத்தாக்கத் தொழில் தொடங்க அளிக்கப்படும் வாய்ப்புகளை பெண்கள் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என தமிழக கூடுதல் தலைமைச் செயலாளரும், தமிழ் நாடு மின் பகிர்மான நிறுவனத் தலைவருமான டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன் வலியுறுத்தினார்.

குரோம்பேட்டை எஸ்.டி.என்.பி.வைஷ்ணவா கல்லூரியில் புதன்கிழமை நடைபெற்ற புத்தாக்கக் கண்டுபிடிப்பு வளர்மையம் தொடக்க விழாவில் அவர் பேசியது

சென்னை புறநகர்ப் பகுதியான குரோம் பேட்டையில் 57 ஆண்டுகளுக்கு முன் இந்த மகளிர் கல்லூரியைத் தொடங்க வேண்டும் என்ற எண்ணம் நிறுவனருக்கு உருவானது கூட ஒரு புதுமைக் கண்டுபிடிப்பு தான்.

நம்மைச் சுற்றி இருந்துவரும் பிரச்னை, குறைபாடு, சவால்கள் தான் புத்தாக்கக் கண்டுபிடிப்புகளுக்கான அடிப்படைக் காரணம். அவற்றை நுட்பமாக ஆராய்ந்து, வணிக ரீதியாக உருவாக்கும் திறமைகளை புத்தாக்கக் கண்டுபிடிப்பு வளர்மையத்தில் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

பெண் கல்வி தொடர்ந்து ஊக்குவிக்கப்பட்ட காரணத்தினால் தமிழ் நாடு தற்போது நாட்டின் மொத்த எண்ணிக்கையில் 42 சதவிகிதம் தொழில் திறன் மிகுந்த பெண்கள் நிறைந்த மாநிலமாகத் திகழ்கின்றது.

சுமார் 15 லட்சம் திறன் மிகுந்த பெண்கள் பல்வேறு தொழிற்சாலைகளில் பணிபுரிந்து வருகின்றனர்.

6 லட்சத்திற்கும் மேற்பட்ட பெண்கள் சொந்தமாக குறு,சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்களை நடத்தி வருகின்றனர்.

பெண்கள் தங்கள் தகுதி, திறமைகளை மேம்படுத்திக் கொள்ள இங்கு வழங்கப்படும் வாய்ப்புகளை நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

தன்னம்பிக்கை, கடின உழைப்பு விடாமுயற்சி, ஆராய்ச்சி மூலம் புத்தாக்கக் கண்டுபிடிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும் என்றார் அவர்.

நிகழ்வில் கல்லூரி முன்னாள் மாணவிகளான பெண் தொழிலதிபர்கள் ராதா, பி.தனுஜா, கமலிகா, மீனாட்சி வைத்தியநாதன் தங்கள் தொழில் அனுபவங்களை விவரித்தனர்.

## வேலூர் அடுத்த இரத்தனகிரி கன்னிகாபுரம் அருகே ஆர்சார்ட் க்கான்டி திறப்பு விழா

சிறப்பு சலுகை, முதல் புக்கிங் செய்யும் பத்து நபர்களுக்கு தங்க நாணயம் இலவசம் என அறிவிப்பு




வேலூர், செப்.12-

வேலூர் மாவட்டம், வேலூர் அடுத்த இராணிப்பேட்டை மாவட்டம், ஆற்காடு தாலுகா, இரத்தனகிரி அடுத்த கன்னிகாபுரம் அருகே ஆர்சார்ட் க்கான்டி திறப்பு விழா ஜே.எஃப்.கன்ஸ்ட்ரக்சன் மேனேஜிங் டைரக்டர் ஜாவித் அஹமத், ரெட் ஸ்கொயர் குரூப் சேர்மன் கே.பிரிதிவ்குமார் ஆகியோர் தலைமையில் கோலாகலமாக நடைபெற்றது.

இதில் சிறப்பு அழைப்பாளர்களாக தமிழ்நாடு ஹோட்டல் மற்றும் ரெஸ்டாரண்ட் உரிமையாளர்கள் சங்க தலைவரும், டார்லிங் குழும தலைவர், டார்லிங் ஹோட்டல் சன் ரெஸ்டாரன்ட் தலைவருமான டாக்டர். எம்.வெங்கடசுப்பு கலந்து கொண்டு சிறப்புரையாற்றி குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தனர்.

இந்நிகழ்ச்சியில் ரெட் ஸ்கொயர் குருப் மேனேஜிங் டைரக்டர் தமிழ்ச்செல்வி, ஜே.எஃப்.கன்ஸ்ட்ரக்சன் மேனேஜிங் டைரக்டர் பர்ஹானா, சாலிட்ரிக்ஸ் எண்டர்பிரைசஸ் மேனேஜிங் டைரக்டர் ஜாஹித் அஹமத், டைரக்டர் ஆப் சாலிட்ரிக்ஸ் பி.ஹரிஷ்குமார், ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இந்த கன்ஸ்டிரக்ஷன் குரூப் சார்ந்த அலுவலர்கள் பணியாளர்கள் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர். இங்கு சிறப்பு சலுகையாக முதல் புக்கிங் செய்யும் பத்து நபர்களுக்கு தங்க நாணயம் இலவசம் என அறிவித்துள்ளனர். அமைதிக்கு எடுத்துக்காட்டாகவும், விவசாயம் சூழ்ந்த, அமைதியான ஒரு சுற்றுச்சூழலில் நீங்கள் குடியிருக்க உகந்த வெற்றிக்கான அதிர்ஷ்ட இடமாகவும், அருகில் தேசிய நெடுஞ்சாலை, மிக அருகில் உலக அளவில் புகழ்பெற்ற சிஎம்சி மருத்துவமனை, என சுற்றுச்சூழல் பாதுகாப்பான இடமாக இந்த இடம் உள்ளது குறிப்பிடத்தக்கது. வாடிக்கையாளர்கள் நேரம் தாழ்த்தாமல் இந்த இடத்தை புக்கிங் செய்து அதிஷ்டமடைய வேண்டுகோள் விடுத்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161